**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பழனி**

**C.C. 11-15** **Previous Date : 5-7-22**
**06-10-2022**

**அரசுசாட்சி 1 சின்னச்சாமி த/பெ.ராமசாமி சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார். மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

**எதிரி ராமசாமி எனது உறவினர் என்றால் சரிதான். எனக்கும் எதிரிக்கும் இடம் சம்மந்தமாக ஏற்கனவே பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். எனக்கும் எதிரிக்கும் முன்னமே விரேதம் இருந்தது என்றால் சரிதான். எனக்கும் எதிரிக்கும் இடையே இடம் சம்மந்தமாக பிரச்சனை இன்னும் உள்ளது என்றால் சரிதான். எதிரி என்னை காய்கறி நறுக்கும் அரிவாள்மனையை வைத்து காயத்தை ஏற்படுத்தினார். எனது வீட்டிற்கு பக்கத்தில் சம்பவம் நடைபெற்றது. எதிரி கிழக்கு பக்கத்தில் உள்ள எனது வீதிக்கு அடுத்த வீதியில் குடியிருக்கிறார். எதிரி எனது வீட்டிலிருந்து 5,6 வீடு தள்ளி குடியிருக்கிறார். எதிரி அரிவாள்மனையை எங்கிருந்து எடுத்துக் கொண்டு வந்தார் என்று எனக்கு தெரியாது. என்னை எனது மகன் மாயவன் அவரது இருசக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றார்.** நானும் எனது மகனும் தான் மருத்துவமனைக்கு சென்றோம். எனக்கும் எதிரிக்குமிடையே ஏற்கனவே இருந்த முன்விரோதம் காரணமாக எனக்கு தற்செயலாக ஏற்பட்ட காயத்தை எதிரி ஏற்படுத்தியதாக அவர் மீது பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. புகாரை நான் கொடுக்க போகவில்லை. மருத்துவமனையில் எழுதினார்கள். புகாரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. நான் ஆஸ்பத்திரியில் படுத்திருந்தபோது கையெழுத்து கேட்டார்கள். நான் போட்டேன். சம்பவம் நடந்த மறுநாள் போலிசார் என்னை மருத்துவமனையில் வந்து விசாரித்தார்கள்.

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2022.10.13 18:16:15 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பழனி**

**C.C. 11–15** **Previous Date : 5–7–22**
**06–10–2022**

**அரசுசாட்சி 3 ராமசாமி த/பெ.கிட்டப்பநாயக்கர். சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார். மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

**அசா.1 சின்னச்சாமி எதிரி ராமசாமி மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். இருவருக்குமிடையே அடிதடி பிரச்சனை நடந்தது. எதிரி அ.சா.1–ஐ வெட்டிவிட்டார். நான் பார்த்தபோது அ.சா.1–க் இரத்தம் வந்து கொண்டிருந்தது. எதிரி அ.சா.1–ஐ வெட்டியதை நான் நேரில் பார்க்கவில்லை என்றும் அவர் என்ன ஆயுதத்தால் அ.சா.1–ஐ வெட்டினார் என்பதும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 மற்றும் எதிரி ஆகிய இருவருமே தரக்குறைவாக பேசிக் கொண்டார்கள் என்றால் சரிதான். எதிரி அ.சா.1–ஐ அவரது வீட்டிலிருந்து வெளியே வரும்படி கூப்பிட்டதை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 சின்னச்சாமி எனது பெரிய மாமா ஆவார். அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2022.10.13 18:16:24 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பழனி**

**C.C. 11–15** **Previous Date : 5–7–22**
**06–10–2022**

**அரசுசாட்சி 4 வெங்கடாசலம் த/பெ.பரமசிவம். சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார். மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

**புகார்தாரர் எனது பெரியப்பா. நான் புகார்தாரரின் வீட்டிற்கு பின்னால் 40 அடி தள்ளி குடியிருக்கிறேன். நான் சத்தம் கேட்டுத்தான் எனது வீட்டிலிருந்து வெளியே வந்தேன் என்றால் சரிதான். அ.சா.1 மற்றும் எதிரி இருவருமே தகாத வார்த்தையால் பேசி சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். அ,சா,1–க்கு அரிவாள் மனையால் காயம் ஏற்பட்டது. எதிரி அரிவாள்மனையை அவரது வீட்டிலிருந்து எடுத்து வந்தார். எதிரி வீடு புகார்தாரர் வீட்டிலிருந்து 4, 5 வீடு தள்ளி உள்ளது என்றால் சரிதான். இருவரும் கைகலப்பில் ஈடுபட்ட போது எதிர்பாராத விதமாகத்தான் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். நான் மாயவன் மற்றும் சின்னச்சாமி ஆகிய மூவரும் ஒரே பைக்கில் மருத்துவமனைக்கு சென்றோம். புகார் கொடுத்த போது நான் போனேன். என்னை ஊரில் வைத்து போலிசார் விசாரித்தார்கள். அ.சா.1 மற்றும் எதிரிக்கிடையே முன் விரோதம் உள்ளது என்றால் சரிதான். நான் அ.சா.1–ன் நெருங்கிய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி அரிவாள்மனையை கொண்டு சென்றபோது அதை பிடுங்க முயற்சி செய்தததில் அ.சா.1–க்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான்.**

K R KALAIVANAN Digitally signed by K R KALAIVANAN Date: 2022.10.13 18:16:33 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பழனி**

**C.C. 11-15** **Previous Date : 5-7-22**
**06-10-2022**

**அரசுசாட்சி 5 மாயவன் த/பெ.சின்னச்சாமி. சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார். மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

**அ.சா.1 சின்னச்சாமி எனது தகப்பனார் என்றால் சரிதான். நானும் அ.சா.1-ம் ஒன்றாக குடியிருக்கிறோம். சம்பவம் நடந்த தேதியில் எதிரியும் அ.சா.1-ம் தகாத வார்த்தையால் பேசிக்கொண்டார்கள் என்றால் , சம்பவம் நடந்த சமயத்தில் நான் அங்கு இல்லை. அ.சா.1-ஐ மருத்துவமனைக்கு கூட்டிச் செல்லும்போது தான் நான் அங்கு வந்தேன். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். யார் யார் தாக்கிக் கொண்டார்கள் என்று எனக்கு நேரடியாகத் தெரியாது. என்ன ஆயுதத்தால் தாக்கிக் கொண்டார்கள் என்றால் அரிவாள்மனையால் தாக்கிக் கொண்டார்கள் என்று சொன்னார்கள். அ.சா.1-க்கும் எதிரிக்குமிடையே ஏற்கனவே இருந்த முன்விரோதத்தை மனதில் வைத்து அ.சா.1-க்கு எதிர்பாராமல் நடந்த காயத்தை எதிரி ஏற்படுத்தியதாக சொல்லி பொய்புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், அ.சா.1 எனது தந்தை என்பதால் அவருக்கு சாதகமாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார் கொடுக்கப்பட்ட சமயத்தில் நான் அங்கு இல்லை என்றால் சரிதான். போலிசார் என்னை ஊரில் வந்து விசாரித்தார்கள். போலிசார் எழுதிக் கொடுத்ததில் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான்.**

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2022.10.13 18:16:44 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி